# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1877/81 - 2014 අගෝස්තු මස 29 වැනි සිකුරාදා - 2014.08.29

*1877/81 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**நுவரெலியா புனித பிரான்ஸிஸ் சேவியர் தேவாலய புனித பிரதேசத்தினை புனித பூமியாகப் பிரகடனப்படுத்தல்**

*இலக்கம் 1681 கொண்ட 2010, நவெம்பர் மாதம் 22 ஆம் திகதி, திங்கட்கிழமை அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள கட்டளை*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1681/3 ஆம் இலக்கம் கொண்ட 2010, நவம்பர் மாதம் 22 ஆம் திகதி, திங்கட்கிழமை வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி மூலமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் பௌத்த சாசன மற்றும் மதவிவகாரஅமைச்சர் கலாநிதி திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள புனித பூமி திட்டமிடல் மற்றும் அபிவிருத்தித் துறை விடயம் தொடர்பாக கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் நீண்டகால பாதுகாப்புக் கருதி அந்தப் பிரதேசத்தினை புனித பிரதேசமாகவும் அதனை "நுவரெலியா புனித பிரான்ஸிஸ் சேவியர் தேவாலய புனித பூமி" என அறிமுகப்படுத்திக்கொள்ள முடியு மெனவும் பிரகடனப்படுத்தப்படுகின்றது.*

*கலாநிதி தி. மு. ஜயரத்ன,*
*பிரதமர், பௌத்த சாசன மற்றும் மதவிவகார அமைச்சர்.*

*பௌத்த சாசன மற்றும் மதவிவகார அமைச்சு,*
*இலக்கம் 135,அநகாரிக்க தர்மபால மாவத்தை,*
*கொழும்பு 07,*
*2014, ஓகத்து 20.*

**அட்டவணை**

*நுவரெலியா புனித பிரான்ஸிஸ் சேவியர் தேவாலய புனித பூமி உள்ளடக்கும் பிரதேசம்*

*நிலஅளவையாளர் நாயகத்தின் 2012 செத்தெம்பர் மாதம் 19 ஆம் திகதிய இலக்கம் NU/NEW/2012/180 கொண்ட சுவட்டு வரைபடத்தில் துண்டு இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ள மத்திய மாகாணத்தில், நுவரெலியா நிருவாக மாவட்டத்தில், நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவில் ஒயபலாத்த கோரளையில் சிறுபிரிவில் நுவரெலியா கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள கீழ் குறிப்பிடப்படும் துண்டு இலக்கம் A எனக் குறியீடு செய்யப்பட்டுள்ள 1.5494 ஹெக்டேயார்ஸ் பரப்பளவு கொண்ட கீழ் குறிப்பிடப்படும் எல்லைகளைக் கொண்ட முழுப் பிரதேசம்.*

**துண்டு இலக்கம் A இற்கான எல்லைகள் கீழ் குறிப்பிடப்படுகின்றது.**

*வடக்கு : ஓடை மற்றும் ஒபேசேக்கரஅனுபவ உரிமைகோரும் காணி;*

*கிழக்கு : கினான் பாதை, புனித பிரான்ஸிஸ் சேவியர் பாதை மற்றும் லோங்க் பாதை;*

தெற்கு : *கினான் பாதை, புனித பிரான்ஸிஸ் சேவியர் பாதை மற்றும் லோங்க் பாதை, பல்பொருள் அங்காடி, உடபுஸ்ஸல்லாவ வீதி மற்றும் புனித அன்ட்ரூஸ் வீதி;*

மேற்கு : *புனித அன்ட்ரூஸ் வீதி, ஓடை, அரச மரக் கூட்டுத்தாபனத்திற்குரிய காணி, புனித பிரான்ஸிஸ் சேவியர் பாதை, அடிப்பாதை மற்றும் ஓடை.*

*09-504*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.